www.tamilarangam.net


இந்தியாவிலிருந்து சிறீலங்காவுக்கு கேபிள் மூலம் மின்சாரம் 2ம் கட்ட ஆய்வு ...





## ஈழமும் இந்தியாவும்-09 : போராளிகளின் பயிற்சி முகாம்களும் எம்.ஜி.ஆரும்

ஞாயிற்றுக்கிழமை, 09 ஜனவரி 2011 03:19

SHARE



இலங்கையின் இன நெருக்கடி தீவிரமடைந்து தமிழ் இளைஞர் அமைப்புக்கள் தமது பாதுகாப்புக்காக தென்னிந்தியாவைப் பின்தளமாகப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்த காலத்திலிருந்தேம தமிழகத்தில் ஆயுதப் பயிற்சிக்கான முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன என்றுதான் சொல்ல வேண்டும். தமிழகத்தின் முக்கிய அரசியல் தலைவர்கள், சட்டசபை உறுப்பினர்கள் மட்டுமன்றி தீவிர தமிழ்ப் பற்றாளர்கள் சிலரும் இந்த முயற்சிகளுக்குப் பெருமளவு உதவிகளை வழங்கிவந்துள்ளார்கள்.

சிலர் தமது காணிகளையே இதற்காகக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் எந்தளவுக்கு போராளி அமைப்புக்களின் மீது பற்றுதலைக் கொண்டிருந்தார்கள் என்பதற்கு இது சிறந்த உதாரணம்.

இது தொடர்பில் தமிழ்க முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு உளவுப் பிரிவினரின் தகவல்கள் கிடைத்துக்கொண்டிருந்த போதிலும், அவ்விடயத்தில் மௌனமாக இருப்பதையே அவர் விரும்பினார். கண்டும் காணாதது போன்ற ஒரு அணுகுமுறையைத்தான் இவ்விடயத்தில் எம்.ஜி.ஆர். போராளிகள் விடயத்தில் கையாண்டார். இதேவேளையில் இவ்விடயத்தில் எம்.ஜி.ஆர். மௌனமாக இருந்த நிலையில் உளவுப் பிரிவுகளின் தகவல்கள் புதுடில்லி வரையில் சென்றது. பிரதமர் இந்திரா காந்திக்கு இது தொடர்பான தகவல்கள் தெரிவிக்கப்பட்டபோது, அவரும் எம்.ஜி.ஆர். போல அது தொடர்பாக அலட்டிக்கொள்ளாமல் மௌனமாக இருப்பதையே விரும்பினார்.

எம்.ஜி.ஆர். கடைப்பிடித்த மௌனத்துக்கும் இந்திரா காந்தியின் மௌனத்துக்கும் வௌ;வேறான காரணங்களே இருந்தன. எம்.ஜி.ஆரைப் பொறுத்தவரையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் பயிற்சிக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அவரது வாக்கு வங்கியில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இரண்டாவதாக அவ்வாறான நடவடிக்கையில் இறங்குவது கருணாநிதியின் பிரச்சாரங்களுக்கு வாய்ப்புக்களைக் கொடுப்பதாக அமைந்துவிடும். இதனாலும், தன்னுடைய அரசியலுக்குத் தமிழ்ப் போராளி அமைப்புக்களுக்கு ஆதரவான செயற்பாடுகள் அவசியமானதாக இருக்கும் எனவும் கருதியதால்தான் இவ்விடயத்தை கண்டும் காணாமலும் இருப்பதற்கு எம்.ஜி.ஆர். விரும்பினார்.

மறுபுறத்தில் இந்திரா காந்தியைப் பொறுத்தவரையில் இதற்கு உள்ளூர் அரசியல் மட்டும் காரணமாக இருக்கவில்லை. சர்வதேச அரசியலும் இதற்குக் காரணமாக அமைந்திருந்தது. உள்ளூர் அரசியலைப் பொறுத்தவரையில் எம்.ஜி.ஆரின் அரசியல் கூட்டு இந்திரா காந்திக்கு அவசியமானதாக இருந்தது. இதனைவிட தமிழகத்தில் அதிருப்தியை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் எதனையும் அவர் விரும்பவில்லை. இதனைவிட பிராந்திய ரீதியான அரசியலே இந்திரா காந்தியின் அணுகுமுறையைத் தீர்மானிப்பதில் பிரதான பங்கு வகித்தது.

இலங்கையில் பதவியிலிருந்த ஜெயவர்த்தன அரசாங்கம் அமெரிக்கா சார்பான கொள்கையைக் கடைப்பிடித்ததுடன், தமிழ்ப் போராளி அமைப்புக்களை ஒடுக்குவதற்கு மேற்கு நாடுகளிடமிருந்து ஆயுத உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளிலும் ஈடுபட்டது. மேற்குலகுடனான ஜெயவர்த்தனவின் நெருக்கமான உறவு - தனது புவியியல் சார்ந்த நலன்களுக்குப் பாதகமானதாக அமையும் என்பதால் ஜெயவர்த்தனவுக்குப் பாடம் புகட்டுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த இந்திரா காந்தியைப் பொறுத்தவரையில் தமிழ் இளைஞர்களுக்கான ஆயுதப் பயிற்சி முகாம்கள் தமிழகத்தில் செயற்படுவது மகிழ்ச்சியளிக்கும் ஒன்றாக இருக்கும் என நம்பப்பட்டாலும் , இந்த முகாம்களை மூடிவிடுமாறு இந்திரா காந்தி தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு முதலில் அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது.

உள்நாட்டில் பாதுகாப்புக்கு இது பிரச்சினையைக் கொடுப்பதாக அமையும் என்பதாலேயே இந்த முகாம்களை மூடிவிடுவதற்கு இந்திரா காந்தி உத்தரவிட்டதாகக் கூறப்படுகின்றது. இருந்தபோதிலும் இந்திரா காந்தியின் இந்தக் கோரிக்கையை தமிழக முதலமைச்சர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். இதற்கு இரண்டு காரணங்களை எம்.ஜி.ஆர். தெரிவித்திருந்தார்.

ஒன்று - ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாக தமிழக மக்கள் உள்ளார்கள் என்பதுடன், ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்ற நிலைப்பாட்டையும் கொண்டவர்களாக உள்ளனர். இந்த நிலையில் முகாம்களை மூடிவிடுவது என்ற முடிவு அவர்களுடைய எதிர்ப்பைத் தோற்றுவிப்பதாக அமையும்.

இரண்டு – கருணாநிதி ஈழத் தமிழர் பிரச்சினையை ஏற்கனவே ஒரு அரசியல் விவகாரமாக்கிவிட்டார். இந்த நிலையில் முகாம்களை மூடிவிடுவது என்ற முடிவை தான் எடுத்தால் அதனைத் தன்னுடைய அரசியல் நலன்களுக்கு கருணாநிதி பயன்படுத்திக்கொள்வார். இது அரசியல் ரீதியாக தனக்குப் பெரும் பின்னடைவாக அமையும் எனவும் எம்.ஜி.ஆர். சுட்டிக்காட்டினார்.

ஆக, தமிழகத்தில் அமைக்கப்பட்ட ஈழப்போராளிகளின் முகாம்களை அகற்றிவிட வேண்டும் என மத்திய அரசு ஆரம்பத்திலேயே மேற்கொண்ட முயற்சிகளுக்குத் தடையாக அமைந்தது தமிழக அரசியல்தான் என்பதை இதன் மூலமாகப் புரிந்துகொள்ள முடியும். தமிழகத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் ஈழத் தமிழர் பிரச்சினையைத் தமது அரசியலுக்கான மூலதனமாகக் கருதிச் செயற்பட முனைந்துள்ள நிலையில் அதற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதால் இந்திரா காந்தியால் மேற்கொண்டு எதனையும் செய்ய முடியவில்லை.

எம்.ஜி.ஆர். குறிப்பிட்டிருந்ததைப் போலவே தமிழ்ப் போராளி அமைப்புக்களுடன் நெருக்கமான உறவுகளை கருணாநிதி ஏற்படுத்தியிருந்தார். குறிப்பாக ரெலோ அமைப்புடன் கருணாநிதியின் நெருக்கம் அதிகமானதாக இருந்தது. ஆனால், அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். குறிப்பாக எந்த ஒரு அமைப்புடனும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தியிருக்கவில்லை.

தமிழகத்தில் உருவாகியிருந்த இந்த மாற்றங்கள் தொடர்பாக இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' இந்திரா காந்திக்கு தொடர்ந்தும் தகவல்களையும், எச்சரிக்கைகளையும் அனுப்பிக்கொண்டிருந்தது. குறிப்பாக தனி ஈழத்தை உருவாக்குவது இந்தியாவுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என இந்திரா காந்திக்கு அனுப்பிய தகவல்களில் றோவும், புலனாய்வுப் பணியகமும் இந்திரா காந்தியை எச்சரித்திருந்தன. தமிழக அரசியல்வாதிகள் இந்தியாவில் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு ஈழத்தை தமக்கான ஒரு தளமாகப்

பதிவுகள்

பதிவுகள்

**ஈழமும் இந்தியாவும்-15: பயிற்சி முடிந்து யாழ். திரும்பிய போராளிகள்**



ஈழப் போராளி அமைப்புக்களு இந்திய ஆயுதப் பயிற்சிகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். ஒரு பறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளக்கு உத்தர பிரதேசத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சிகளை வழங்க, மற்றொரு புறத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றம் ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கு இந்திய இராணுவ அதிகாரிகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

**ஈழமும் இந்தியாவும்-14: றோ அதிகாரியை சந்திக்க அவசரமாக தமிழகம் வந்த பிரபாகரன்**



இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பயன்படுத்திக் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் தலைமையைத் தான் எடுத்துக்கொள்வதற்காக சந்திரஹாசன் வகுத்துவைத்திருந்த திட்டம் அன்டன் பாலசிங்கத்துக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்தது. இது சந்திரஹாசனின் திட்டமாக மட்டுமன்றி றோவின் ஒரு பகுதியினரும் இதனை விரும்பியிருப்பதற்கான ஏதுநிலைகளும் காணப்பட்டன.

More:
ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..
ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்

சிந்தனைத் துளிகள்

**"இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள்."**

**-தேசியத் தலைவர்**

பூராயம் - RSS

தமிழீழத் தளங்கள்


தமிழீழக் குழுமம்

தமிழ்வெளி

சமகாலப்பார்வை

சமகாலப்பார்வை

**லசந்தவின் மரணத்தின் பாதை : அரசு கிளப்பும் புதிய சர்ச்சை**



இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருக்கின்றதா? அல்லது இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையில் அவரை மாட்டிவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

**மும்பையில் மகிந்தருக்கு கிடைத்த இரட்டைத்**

www.tamilarangam.net

ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

பயன்படுத்திக்கொள்வார்கள் எனவும் இந்த எச்சரிக்கைகளில் இந்தியப் புலனாய்வு அமைப்புக்கள் தெரிவித்திருந்தன.

இந்தியாவிலிருந்து பிரிந்து திராவிடநாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை திராவிடர் கழகத்தவர்களால் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு என அறிவித்து அண்ணாத்துரையே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தவர்களில் ஒருவராக இருந்துள்ளார். இருந்தபோதிலும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போர் வெடித்த பின்னர் இந்தக் கோரிக்கையை அண்ணாத்துரை கைவிட்டார். சீனாவுக்கு எதிரான போராட்டத்தில் அனைவரும் இணைந்து நிற்க வேண்டும் என அவர் அறிவித்தார்.

அண்ணாத்துரை இந்தக் கோரிக்கையைக் கைவிட்டிருந்தாலும், நீறுபூத்த நெருப்பாக இந்தக் கோரிக்கை தீவிரவாத அமைப்புக்கள் சிலவற்றிடம் இருந்துகொண்டுதான் இருந்தது. இலங்கையில் தனி ஈழம் அமைக்கப்பட்டால், தமிழகத்திலும் பிரிவினைவாத சக்திகளுக்கு அது உற்சாகமளிப்பதாக அமைந்துவிடும் என இந்திய புலனாய்வு நிறுவனங்கள் எச்சரித்திருந்தன. அதனால் போராளிகள் விடயத்தில் கடுமையான நடந்துகொள்ள வேண்டும் என்பதுதான் இந்தியப் புலனாய்வு அமைப்புக்களின் கருத்தாக அமைந்திருந்தது.

இருந்தபோதிலும், இந்திரா காந்தியைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் செயற்பாடுகளுக்கு எதிரான நகர்வுகள் எதனையும் முன்னெடுக்கக்கூடியவராக அவர் இருக்கவில்லை. காரணம் தமிழகத்தில் எம்.ஜி.ஆர். பலமானவராகவும் வசீகரம் மிக்க ஒரு தலைவராகவும் இருந்தார். அத்துடன் தென்மாநிலங்களில் பலவீனமான நிலையில் காங்கிரஸ் இருந்த அதேவேளையில், தமிழகத்தில் எம்.ஜி.ஆரைப் பகைத்துக்கொண்டு அரசியல் செய்ய முடியாது என்பதையும் இந்திரா காந்தி தெரிந்திருந்தார்.

இந்த நிலையில், ஜெயவர்த்தனவை வழிக்குக் கொண்டுவருவதறகு போராளிகளை ஒரு வரையறைக்குள் பயன்படுத்திக்கொள்வது தொடர்பாக இந்திரா காந்தி சிந்திக்கத் தொடங்கிளார். இதற்காக புலனாய்வு அமைப்புக்களின் ஆலோசனைகளையும் அவர் கோரினார்.

பூராயத்துக்காக
**சிவயோகன்**

Add Comment

இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது (திங்கட்கிழமை, 10 ஜனவரி 2011 01:33)

**தோல்வி: புலனாய்வுத் தகவல்கள்**



உலகக் கிண்ணத்துக்க கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்தது என்பதைவிட, இந்தப் போட்டியின் போது இந்தியாவினால் இலங்கை- குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்ட முறையில் அவமானப்படுத்தப்பட்டதுதான் கொழும்புக்குப் பெரும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இந்தியாவால் அவமானப்படுத்தப்பட்டதை சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திண்டாடுகின்றது இலங்கை அரசு.

More:
- யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவு: வடக்கின் வசந்தம் தந்த பரிசு
- கூட்டமைப்பின் 'தீர்வுப் பொதி': அரசைத் திருப்திப்படுத்தவா?
- லிபியா நனைகிறது என்று இலங்கை அழுகிறது

இணைப்புக்கள்

**தமிழ்ச் செய்திகள்**
ஈழநேசன்
மீனகம்
யாழ் இணையம்
பி.பி.சி தமிழோசை
லங்காசிறி
செய்திகள்
தமிழ்வின்
மனிதன்
2 தமிழ்
அதிர்வு
சரிதம்
புதினம்நியூஸ்
புதினப்பலகை
இன்போ தமிழ்
தமிழ்ஸ்பை
வன்னிஒன்லைன்
தமிழ்உலகம்
தமிழ்சிஎன்என்
சங்கதி
பதிவு
ஈழம் பிறஸ்
யுகே தமிழ்நியூஸ்
தமிழ்த்தாய்
தமிழ்ச்செய்தி
தாய்நிலம்
ஈழம்வெப்

**ஆங்கிலச் செய்திகள்**
TamilNet
TamilNational
DailyMirror
SundayTimes
SundayLeader
Nation
LakbimaNews
TheBottomLine
TamilWeek
LankaPage
ColomboPage
TheAcademic
TamileelamNews
TamilCanadian
UKTamilNews
Sangam
TorontoTamil
Reuters
MSNBC
Yahoo
BBC
Google
Worldnews
CNN

**இணைய சஞ்சிகைகள்**
ஈழநேசன்
அப்பால்தமிழ்
தெனாலி
தமிழில் கல்வி
தமிழ்சினிமா
பதிவுகள்
தமிழ்
அப்புசாமி
சினிசவுத்
கோல்டன் தமிழ்
நெற்தமிழ்
மங்கையர் மலர்
வெப் தமிழன்
திண்ணை
தமிழோவியம்
சுரதா
காலச்சுவடு
கூடல்
வார்ப்பு
நெய்தல்
கவிமலர்
தமிழோசை
எழில்நிலா
ஈழம் வோல்பேப்பர்ஸ்
தமிழம்
தமிழ்மணம்
தமிழ்வாணன்
முத்தமிழ்
தமிழ்முதம்
நிலாசாரல்
த தமிழ்
உயிர்மை

**தமிழ் பத்திரிகைகள்**
வலம்புரி
வீரகேசரி
தினக்குரல்
உதயன்
விகடன்
சுடர் ஒளி
குமுதம்
தினகரன்
தினத்தந்தி
விடுதலை
தினபூமி
தினமணி
மாலைச்சுடர்
தினமலர்
மாலைமலர்
கல்கி
நக்கீரன்

**தொலைக்காட்சிகள்**
வளரி வலைக்காட்சி
ஜிரிவி
மக்கள் தொலைகாட்சி
விஜய் தொலைக்காட்சி
தமிழன் தொலைகாட்சி
தமிழ் விஷன்
தீபம்
குறள் தொலைகாட்சி
ஐரோப்பிய தொலைகாட்சி
ரிவி வண்
திரைப்படம் பார்க்க

**இணைய வானொலிகள்**
புலிகளின் குரல்
தமிழர் குரல்
ஐபிசி தமிழ்
பிபிசி தமிழ்
சிரிஆர் வானொலி
தமிழ்ஸ்ரார்
வெற்றி
சிரிபிசி
தமிழ் எப்எம்
கனேடிய தமிழோசை
சிஎம்ஆர் பண்பலை
தமிழ் எப்எம்
கீதவாணி
ஏரிபிசி
சக்தி எப்எம்
சூரியன் எப்எம்
ஒலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்